## பா.ஜ.க. B–அணி, C–அணி, D–அணி என பல அணிகளுடன் வந்தாலும்

# நம் தி.மு.க.தான் மீண்டும் சாம்பியன் என்பதை நாம் நிரூபிக்க வேண்டிய தேர்தல்!

### திண்டுக்கல்லில் நடைபெற்ற ‘களத்தில் இளைஞர் அணி’ கூட்டத்தில் –

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**திண்டுக்கல், மார்ச் 26 –**

**திண்டுக்கல்லில் ‘களத்தில் இளைஞர் அணி’ தேர்தல் பிரச்சாரம் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுடன் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினார்.**

**அப்போது அவர், “இன்று பா.ஜ.க. ஒரு அணியாக இறங்கியிருக்கிறது, அது போதாது என்று பா.ஜ.க.வின் பி–அணி, சி–அணி, டி–அணி என பல அணிகளைச் சேர்த்துகொண்டு வருகிறது. இப்படி எத்தனை அணிகள் வந்தாலும், நம் தலைவர்தான் சாம்பியன், நம் தி.மு.க.தான் மீண்டும் சாம்பியன் என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டிய தேர்தல், வருகின்ற சட்டமன்றத் தேர்தல்” என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

ஒருங்கிணைந்த திண்டுக்கல் மாவட்டம், ஒருங்கிணைந்த தேனி மாவட்டத்தின் நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், உங்கள் அனைவரையும் ஒரே இடத்தில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தேனி மாவட்டமும், திண்டுக்கல் மாவட்டமும் என்றைக்கும் கழகத்தின் கோட்டை என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த இரண்டு மாவட்டங்களும் நம் கழகத் தலைவர் என்னவெல்லாம் உத்தரவு போடுகின்றாரோ, அதை உடனடியாக 100 சதவிகிதம் செய்கின்ற மாவட்டங்கள். அதற்கு ஒரு சிறந்த உதாரணம் கடந்த பிப்ரவரி மாதம் விருதுநகரில் மிகப் பெரிய நிர்வாகிகள் சந்திப்பை, மாநாடு மாதிரி நடத்தினோம். அந்த நிர்வாகிகள் சந்திப்புக்கு இந்தத் தேனி மாவட்டத்திலிருந்தும் திண்டுக்கல் மாவட்டத்திலிருந்தும் அனைத்து நிர்வாகிகளும் வந்து சிறப்பாகக் கலந்துகொண்டீர்கள்.

நான் பலமுறை சொல்வதுண்டு, எத்தனையோ நிகழ்ச்சிகள், சார்பு அணிகளையெல்லாம் சந்திக்கிறோம், அண்ணன் சக்கரபாணி சொன்னது மாதிரி கடந்த 10 நாட்களாகப் பல மாவட்டங்களுக்குச் சென்று இளைஞர் அணி மட்டுமல்ல, சார்பு அணி நிர்வாகிகளையும் சந்தித்துவிட்டு வருகிறேன். எத்தனையோ நிகழ்ச்சிக்குச் சென்றாலும், இளைஞர் அணி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நிர்வாகிகளான உங்களையெல்லாம் சந்திக்கும்போது என் குடும்ப நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, என் சகோதரர்களைச் சந்திக்கின்ற அந்த நெகிழ்வு எனக்கு ஏற்படும். அந்த உணர்ச்சியோடு நான் இங்கே உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன்.

### ‘களத்தில் இளைஞர் அணி’

இன்று முக்கியமான ஒரு தருணத்தில் நாம் சந்திக்கிறோம். இங்கே ஐ.பி.செந்தில் அவர்கள் சொன்னது மாதிரி, நம் கைகளில் இன்னும் 29 நாட்கள் இருக்கின்றன. தேர்தல் தேதி ஏப்ரல் 23 என அறிவிக்கப்பட்டுவிட்டது. இன்று 24–ஆம் தேதி, நம்ம கையில் இன்னும் 29 நாட்கள் இருக்கின்றன. அதற்கு நாம் தயாராக வேண்டும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது ‘களத்தில் இளைஞர் அணி’ என்று ஒரு முன்னெடுப்பை ஆரம்பித்து, நீங்கள் அனைவரும் களத்தில் இறங்கிப் பிரச்சாரத்தை மேற்கொண்டீர்கள். வாக்காளர்களைச் சந்தித்தீர்கள், உதயசூரியன் சின்னத்துக்கு நம் கூட்டணிக் கட்சிகளுக்கெல்லாம் நீங்கள் வாக்குச் சேகரித்தீர்கள். உங்களின் உழைப்பு, உங்களின் பிரச்சாரம்தான் நாடாளுமன்றத் தேர்தலில் 100 சதவிகித வெற்றியை நாம் பெற்றுத் தந்தது. அந்த வெற்றிக்கு நீங்கள் ஒரு மிக மிக முக்கியமான காரணம்.

இப்போது இந்தச் சட்டமன்றத் தேர்தலில் இளைஞர் அணி ஒரு விஷயத்தைக் கையில் எடுத்துக்கொண்டார்கள் என்றால், அதைச் சாதிக்காமல் விடமாட்டார்கள், 100% வெற்றியைத் தேடிக் கொடுப்பார்கள் என்பதை மீண்டும் நிரூபிக்கவேண்டிய கட்டாயம் நமக்கு வந்திருக்கிறது. இன்று இந்தியாவில் பல கட்சிகள் பூத் கமிட்டி அமைப்பதற்கே திண்டாடிக்கொண்டு, திணறிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், தி.மு.க-வில் நம் இளைஞர் அணியில் இன்று பூத்துக்கு ஒரு இளைஞர் அணி நிர்வாகியை நாம் நியமித்துள்ளோம். இவ்வளவு பெரிய ஒரு இளைஞர் படையைத் தேர்வு செய்து வைத்திருக்கிறோம். இந்த இளைஞர் படையைத் தேர்தல் என்கின்ற போரில் நாம் பயன்படுத்தி, அதில் வெற்றியை நாம் பெற்றாக வேண்டும். அதற்கு தயார்படுத்துவதற்கான பாசறைக் கூட்டம்தான் இன்று இந்தக் கூட்டம்.

தி.மு.க–வில் 25 அணிகள் இருக்கின்றன. ஆனால், டாக்டர் கலைஞர் அவர்கள், ``எத்தனை அணிகள் இருந்தாலும், இளைஞர் அணிதான் முதன்மையான அணி, முதல் அணி. தலைவர் என்ன சொன்னாலும், அதை களத்தில் இறங்கிச் செயல்படுத்துகின்ற முதல் அணி இளைஞர் அணி” என்று கலைஞர் அவர்கள் அடிக்கடி பெருமையாகச் சொல்வார். கலைஞர் சொன்னதை இன்று நாம் நிரூபித்துக் காட்ட வேண்டிய நேரம் வந்திருக்கிறது. இந்தத் தேர்தலிலும் நம் தலைவர்தான் நிச்சயம் வெற்றி பெறப்போகிறார். அதற்கு இளைஞர் அணி தம்பிமார்கள், இளைஞர் அணி நிர்வாகிகள் நாம் கடுமையாக உழைத்தோம் என்கின்ற பெருமை நமக்கு வர வேண்டும்.

### இளைஞர் அணி பயிற்சிக்களம்

இளைஞர் அணியைப் பொறுத்தவரைக்கும் தாய்க்கழகத்தில் பணியாற்றுவதற்கு ஒரு பயிற்சிக்களம் மாதிரி. நாம் எவ்வளவு பெரிய கிரிக்கெட் வீரராக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், எடுத்த உடனே நமக்கு முதன்மை ஆட்டத்தில் ஆட வாய்ப்பு கொடுக்க மாட்டார்கள். முதலில் சோதனை செய்வார்கள். இவன் எப்படி ஆடுகிறான், இவனுக்கு உண்மையாகவே ஆடத் தெரிகிறதா, இவன் ஆக்ரோஷமாக ஆடுகிறாரா, இவன் தொடக்க ஆட்டக்காரரா, எந்த நிலையில் நன்றாக ஆடுகிறான் என்பதைப் பார்ப்பதற்கு வலைப்பயிற்சி கொடுப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு வலைப்பயிற்சிதான் நமக்கு இளைஞர் அணி வேலைகள்.

இளைஞர் அணியில் நாம் செய்கின்ற இந்த வேலைகள்தான் நாளைக்கு உங்களின் வளர்ச்சியைத் தீர்மானிக்கப்போகின்ற பணிகள். நமக்கு வேலை கொடுக்கிறார்களோ இல்லையோ தொடர்ந்து இளைஞர் அணியில் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறோம், கழகப் பணிகளைச் செய்து வருகிறோம், இளைஞர் அணி பணிகளைச் செய்து வருகிறோம், எத்தனையோ பணிகள் நடந்திருக்கின்றன.





2019–லிருந்து தொடர்ந்து களத்தில் இருந்து வருகிறோம், பிரச்சாரப் பணிகளையும் மேற்கொள்கிறோம். ஆனால், இப்போது கடைசி நேரத்தில் நாம் இன்னும் தீவிரமாக உழைக்க வேண்டும். அப்போதுதான் அது முழுப்பலனைத் தரும்.

இத்தனை நாள் பணியாற்றியதற்கான முழுப்பலனையும் நாம் அடைய வேண்டும் என்றால், கடைசி நிமிடத்தில் நாம் இன்னும் அதிதீவிரமாக வேலை செய்ய வேண்டும். ‘பைனல் புஸ்’ (Final Push) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள், கடைசி நேரத்தில் அந்தக் கூடுதல் முயற்சி இருக்க வேண்டும்.

மக்களைச் சந்திக்கிறோம், சந்திப்பதற்குத் தயாராகிவிட்டோம். எந்தத் தைரியத்தில் மக்களைச் சந்திக்கிறோம்.

இன்று உயர்கல்வி சேர்க்கை விகிதம் (Gross Enrollment Ratio - GER) என்று சொல்வார்கள். பள்ளிக்கூடம் முடித்துவிட்டு எத்தனை பேர் உயர்கல்வி படிக்கப் போகிறார்கள் என்கின்ற புள்ளிவிவரம்தான் GER என்று சொல்வார்கள். ஒட்டுமொத்த இந்தியாவின் ஜி.இ.ஆர். 26 சதவிகிதம். ஆனால், தமிழ்நாட்டின் ஜி.இ.ஆர். 50 சதவிகிதம். இந்தியாவிலேயே முதலிடம் நம் தமிழ்நாடு. அதை இன்னும் ஊக்குவிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும், அது தனியார் கல்லூரியாக இருந்தாலும் சரி, எந்தப் பாடப்பிரிவில் சேர்ந்தாலும், அவர்களுக்குக் கல்வி ஊக்கத் தொகையாக மாதம் 1,000 ரூபாய் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம், ‘புதுமைப் பெண்’ திட்டம் மூலம் நம் அரசு கொடுத்துக்கொண்டு இருக்கிறது. 13 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

### 300 விளையாட்டு வீரர்கள்

விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் அ.தி.மு.க ஆட்சியில் 3 சதவிகித இடஒதுக்கீட்டில் 2 பேருக்குதான் அரசு வேலை வழங்கினார்கள். ஆனால், நாம் கடந்த இரண்டு வருடத்தில் மட்டும் 300 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். எந்த ஆட்சியிலும் செய்தது கிடையாது.

‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத்’ திட்டம். அது தேர்தல் அறிக்கையில் நாம் சொன்ன திட்டம். அதையும் கடந்த மூன்று வருடமாகக் கொடுத்து வருகிறோம். ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நம் தலைவர் கொடுத்திருக்கிறார். அந்தத் திட்டத்தால் மகளிர் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பு. அதை எப்படியாவது நிறுத்திவிடலாம், தேர்தல் நேரத்திலாவது நிறுத்த வேண்டும் என்று சில மாநிலங்களில் நீதிமன்றத்துக்குச் சென்று நிறுத்தியிருக்கிறார்கள். மூன்று மாதங்களுக்கு நிறுத்த வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். ஆனால், நம் தலைவர் `நான் ஆயிரம் ரூபாய் கொடுப்பதைத் தடுக்கப் பார்க்கிறாயா? இப்பொழுது எப்படி நிறுத்துவாய் பார்க்கலாம், நான் 5,000 ரூபாய் கொடுக்கிறேன்’ என்று இன்று, ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கோடியே 31 லட்சம் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் நம் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நம் தலைவர் இன்னொரு வாக்குறுதியும் கொடுத்திருக்கிறார். மகளிர் உரிமைத் தொகை திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடனே, 1,000 ரூபாயை உயர்த்தி 2,000 ரூபாய் கொடுக்கிறேன் என்கின்ற வாக்குறுதியும் நம் தலைவர் கொடுத்திருக்கிறார். இப்படிப் பல்வேறு திட்டங்கள்.

‘தாயுமானவர்’ என்று ஒரு திட்டம். முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் இனிமேல் வெயிலில் வந்து ரேஷன் கடையில், வரிசையில் நிற்கத் தேவையில்லை. அவர்களின் ரேஷன் பொருள்கள் அவர்களின் வீட்டிற்கே சென்று நம் அரசு கொடுத்துக் கொண்டு இருக்கிறது. கிட்டத்தட்ட 28 லட்சம் பேர் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

### திண்டுக்கல், தேனி திட்டங்கள்

குறிப்பாக, இந்தத் திண்டுக்கல், தேனி மாவட்டங்களுக்கு என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தியுள்ளோம் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒட்டன்சத்திரம் - பழனி நெடுஞ்சாலை இன்று 175 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு நான்கு வழிச் சாலையாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

திண்டுக்கல் - நத்தம் சாலையும் நான்கு வழிச் சாலையாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழனி அரசு மருத்துவமனை இன்று தரம் உயர்த்துகின்ற பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

> **நாம் இன்னும் அதிதீவிரமாக வேலை செய்ய வேண்டும்!**
>
> **இத்தனை நாள் பணியாற்றியதற்கான முழுப்பலனையும் நாம் அடைய வேண்டும் என்றால், கடைசி நிமிடத்தில் நாம் இன்னும் அதிதீவிரமாக வேலை செய்ய வேண்டும். ‘பைனல் புஸ்’ (Final Push) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள், கடைசி நேரத்தில் அந்தக் கூடுதல் முயற்சி இருக்க வேண்டும்.**

சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழனி கோயில் திருப்பணிகள் இன்று நடைபெற்று வருகின்றன. தேனியில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உணவுப் பூங்கா அமைக்கப்பட்டிருக்கிறது.

5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குமுளியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப் பட்டிருக்கிறது. ஆண்டிபட்டி, தேனி ரயில் நிலையங்களுக்கு இடையே புதிய ரயில்வே மேம்பாலம் நம் அரசு கட்டிக் கொடுத்திருக்கிறது.

அணைக்கரைப்பட்டி முதல் போடிநாயக்கனூர் வரைக்கும் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புறவழிச் சாலை. 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரை - கொச்சி சாலையில் மேம்பாலம் கட்டுகின்ற பணி.

இப்படி, தேனி மாவட்டத்துக்கும் திண்டுக்கல் மாவட்டத்துக்கும் நாம் பல்வேறு பணிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். இதையெல்லாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய கடமை இன்று நம்மிடம் இருக்கிறது.

மோடி அவர்களும், அமித்ஷா அவர்களும் தமிழ்நாட்டுக்கு வந்து ஒரு நான்கு அடிமைக் கட்சிகளை, கூட வைத்துக்கொண்டு இருந்தால், தமிழ்நாட்டுக்குள்ளே எப்படியாவது நுழைந்துவிடலாம் என்று முயற்சி செய்கிறார்கள். நான் உறுதியாகச் சொல்கிறேன், கருப்பு சிவப்பு வேட்டி கட்டிய கடைசி உடன்பிறப்புகள் இருக்கின்ற வரைக்கும், நம் இளைஞர் அணி தம்பிமார்கள் இருக்கின்ற வரைக்கும் நிச்சயம் அதை நடக்க விடமாட்டோம்.

நீங்கள் சூழ்ச்சி பண்ணி குரளி வித்தையெல்லாம் காட்டி வடநாட்டில் நீங்கள் ஜெயிக்கலாம். ஆனால், தமிழ்நாட்டிடுக்குள் உங்களின் பருப்பு வேகவே வேகாது. நம் முதலமைச்சர் அவர்களால் கட்டிக் காக்கப்படுகின்ற மாநிலம் நம் தமிழ்நாடு. அதனால்தான் நம் முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்கிறார். வருகின்ற சட்டமன்றத் தேர்தல் டெல்லி அணிக்கும் தமிழ்நாடு அணிக்குமான தேர்தல். நிச்சயம் நம் தமிழ்நாடு அணி வென்று காட்டுவோம்.

பொதுவாக, நீங்கள் செய்திகளில், தொலைக்காட்சிகளில் பார்ப்பீர்கள். பிற கட்சியின் தலைவர்கள் வேறு கட்சியின் அலுவலகங்களுக்குச் சென்றால் அது பெரிய முக்கியச் செய்தியாக போடுவார்கள், தலைப்புச் செய்திகளாகப் போடுவார்கள். ஆனால், இரண்டு நாளாக நீங்கள் செய்தியில் பார்த்துக்கொண்டு இருந்திருப்பீர்கள். அ.தி.மு.க–வின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் அ.தி.மு.க அலுவலகத்துக்கு சென்றிருக்கிறார் என்பதுதான் இப்பொழுது இரண்டு நாளாக முக்கியச் செய்தி. ஏனென்றால், இவ்வளவு நாளாக அவர் அ.தி.மு.க அலுவலகத்திற்கே செல்லவில்லை. அவர் டெல்லியில் இருக்கக்கூடிய அமித்ஷா அலுவலகத்துக்குதான் சென்றுகொண்டு இருந்தார். அ.தி.மு.க காரருக்கும் சேர்த்து, நாம்தான் குரல் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்களின் உரிமையையும் நாம்தான் காப்பாற்ற வேண்டியதாக இருக்கிறது. நம் தலைவர்தான் தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருந்தார். உங்கள் அலுவலகம் சென்னை, ராயப்பேட்டையில் இருக்கிறது, அங்கே செல்லுங்கள். ஏன் திருட்டுத்தனமாக பத்து நாளைக்கு ஒருமுறை டெல்லிக்குச் செல்கிறீர்கள்? இதற்கு முன்பாவது முகத்தை மூடிக்கொண்டு போய் கொண்டு இருந்தார், இப்பொழுது முகத்தை திறந்து வைத்துக்கொண்டே போகிறோர். நம் தலைவர்தான் கேட்டார்கள், `ராயப்பேட்டையில் உங்களுக்கு ஒரு அலுவலகம் இருக்கிறது மறந்துவிடாதீர்கள்’ என்று.

இன்று அ.தி.மு.க கூட்டணிக் கட்சிகள் எல்லாம் செல்ல ஆரம்பித்திருக்கின்றன. இதுதான் இன்று அ.தி.மு.க–வின் நிலைமை. இதை மக்களிடம் பேச வேண்டும். ஏன் இந்த நிலைமை உருவானது என்பதைப் பற்றி பேசுங்கள். நிச்சயமாக இந்தத் தேர்தலுக்குப் பிறகு, பத்து தோல்வி பழனிச்சாமியைப் படுதோல்வி பழனிச்சாமியாக நம் தமிழக மக்கள் மாற்றிக் காட்டப்போகிறார்கள்.

எப்பொழுதுமே ஒரு புகழ்வாய்ந்த நிறுவனம் ஒரு பொருளை அறிமுகம் செய்தார்கள் என்றால், அந்தப் பொருளுக்கு மக்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பு இருந்தது என்றால், இந்தப் போட்டி நிறுவனங்கள் இருப்பார்கள் டுபாக்கூர் நிறுவனம் என்று சொல்வார்கள். அவர்கள் என்ன செய்வார்கள் என்றால், எப்படியாவது இதை நாம் கைப்பற்ற வேண்டும், இதை வைத்து நாம் சம்பாதிக்க வேண்டும், இதை வைத்து எப்படியாவது மக்களை ஏமாற்ற வேண்டும் என்று `அசம்பிள்டு பீஸ்’ தயார் செய்வார்கள். `சைனா மேக்’ என்று சொல்வார்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். அந்த வகையில், இன்று பா.ஜ.க. `சைனா மேக்’ மாதிரி ‘டெல்லி மேக்’ என்று அ.தி.மு.க கூட்டணியைச் அசம்பிள்டு செய்திருக்கிறார்கள். அந்தக் கூட்டணிக்கு நிச்சயமாக வாரன்டியும் கிடையாது, கேரன்டியும் கிடையாது. தேர்தல் முடிந்த உடனே பா.ஜ.க அந்தக் கூட்டணியின் இணைப்பைத் துண்டித்துவிடும். இது நிச்சயம் நடக்கும்.

### பீகாரில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது?

பீகாரில் வெற்றி பெற்றது நிதிஷ்குமார் அவர்கள், பத்து முறை முதலமைச்சர். இன்று அவரை ஓரங்கட்டிவிட்டு அவரை எம்.பி ஆக்கிவிட்டு, பீகாரில் பா.ஜ.க குறுக்கு வழியில் ஆட்சியைக் பிடித்திருக்கிறது. பத்து முறை முதலமைச்சராக இருந்த நிதிஷ்குமாருக்கே இந்த நிலைமை என்றால், பாதம் தாங்கி பழனிச்சாமி நிலைமையை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். அ.தி.மு.க. கூட்டணி இப்படி இருக்கிறது. ஆனால், நம் கூட்டணி மக்களால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டணி தி.மு.க கூட்டணி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி. இன்று பா.ஜ.க. ஒரு அணியாக இறங்கியிருக்கிறது, அது போதாது என்று பா.ஜ.க.வின் பி–அணி, சி–அணி, டி–அணி என பல அணிகளைச் சேர்த்துகொண்டு வருகிறது. இப்படி எத்தனை அணிகள் வந்தாலும், நம் தலைவர்தான் சாம்பியன், நம் தி.மு.க.தான் மீண்டும் சாம்பியன் என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டிய தேர்தல், வருகின்ற சட்டமன்றத் தேர்தல் களத்தில் வெற்றி பெறப்போவது நம் தலைவர் அவர்கள்தான், அதற்கு நம் இளைஞர் அணி முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

### கொள்கையற்ற கூட்டம்

நம் வரலாறு தெரியாமல், நாம் செய்துகொண்டு இருக்கக்கூடிய சாதனைகள் புரிந்துகொள்ளாமல் சில பேர் மாற்றுக் கட்சிகளிலும் இருப்பார்கள். அவர்களையும் கண்டிப்பாக நீங்கள் சென்றடையுங்கள்.

அதே மாதிரி இப்பொழுது கொள்கையற்ற ஒரு கூட்டமும் சுற்றிக்கொண்டு இருக்கிறது. அந்தக் கொள்கையற்ற கூட்டத்தையும் கொள்கைப்படுத்துகின்ற முயற்சியில் நாம் இறங்குவோம். அப்படிச் சந்திக்கும்போது நம் கொள்கைகளை அவர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள், நம் சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள். தரவுகள் இருக்கின்றன. தரவுகள் பொய் சொல்லாது. நம் சாதனைகள் அத்தனையும் தரவுகளாக இருக்கின்றன. முந்தைய பத்து ஆண்டுக் கால அ.தி.மு.க ஆட்சியில் தமிழ்நாடு எப்படியெல்லாம் பின்னுக்குப் போனது, என்னென்ன உரிமைகளை ஒன்றிய அரசுக்கு அ.தி.மு.க விட்டுக் கொடுத்தார்கள், கடந்த ஐந்து வருடத்தில் அதையெல்லாம் எப்படி நாம் மீட்டெடுத்து இருக்கிறோம் என்பதனை ஆதாரத்தோடு எடுத்துச் சொல்லுங்கள். எல்லாரையும் ஒரே நேரத்தில் சம்மதிக்க வைப்பது கொஞ்சம் கடினம். ஆனால், அதற்கான முயற்சியை நாம் செய்வோம்.

அடுத்த 29 நாட்கள் நீங்கள் சந்திக்கின்ற ஒவ்வொரு நபரும் தேர்தல் அன்றைக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். அதற்கான முழு வேலையில் நாம் இறங்க வேண்டும். யாருடைய வாக்குச்சாவடியில் யார் அதிக வாக்குகள் வாங்கித் தரப் போகிறீர்கள் என்று உங்களுக்குள் ஒரு ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும்.

### பகிர்ந்துகொள்ளுங்கள்

நீங்கள் உங்களின் வேலைகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள். ``இத்தனை வாக்காளர்களுக்கு நான் பொறுப்பு, இந்தந்தக் குடும்பங்களுக்கு நான் பொறுப்பு, இந்தத் தெருவிற்கு நான் பொறுப்பு’ என்று உங்களுக்குள் அந்தத் திட்டம்போட்டு உத்தியுடன், நுண் அளவில் இறங்கிப் பணியாற்றினீர்கள் என்றால் நிச்சயம் வெற்றி உறுதி.

நான் எப்படி உங்களையெல்லாம் பலமுறை சந்திக்கிறேனோ, அதே மாதிரி வட்டம் மற்றும் வாக்குச்சாவடி அளவில் இருக்கக்கூடிய இளைஞர் அணி நிர்வாகிகள் பொறுப்பாளர்களை நீங்கள் தொடர்ந்து மீண்டும் மீண்டும் சந்தியுங்கள். உங்களில் பல பேர் பி.எல்.ஏ. 2–க்களாக, பி.எல்.சி.–க்களாக இருப்பீர்கள் - அந்தப் பணிகளையும் கவனமாக மேற்கொள்ளுங்கள். உங்கள் வாக்குச்சாவடியில், உங்கள் தொகுதியில் நம் பணி, இளைஞர் அணி பணி தனியாகத் தெரிய வேண்டும், தனித்துவமாகத் தெரிய வேண்டும். களத்தில் மட்டுமல்ல, தேர்தல் முடிவிலும் இது தெரியும். ஏனென்றால், எந்தெந்த வாக்குச்சாவடியிலிருந்து யார் யார் வருகிறீர்கள் என்கின்ற பட்டியல் நம் அன்பகத்தில் இருக்கிறது.

களத்தில் இளைஞர் அணி பணிகளைச் செய்கின்ற பொழுது, இங்கே வந்திருக்கக்கூடிய மாவட்ட, ஒன்றிய, நகரச் செயலாளர்கள், அவர்களையும் கலந்து ஆலோசித்துவிட்டு அவர்களின் அனுமதியைப் பெற்றுவிட்டு நிச்சயம் அதைச் செய்யுங்கள். அவர்கள் உங்களை நிச்சயம் வழிநடத்துவார்கள், எந்த விதத்திலும் நிறுத்த மாட்டார்கள். அடுத்த 29 நாள் ஒவ்வொரு நாளும் நீங்கள் எத்தனை பேரை சந்திக்கிறீர்கள், எங்கெல்லாம் பிரச்சாரம் செய்தீர்கள் என்று தேதியுடன், புகைப்படத்துடன் ஒரு சிறு குறிப்பேடு பராமரியுங்கள். நான் மீண்டும் பத்து நாளில் இந்த மாவட்டத்துக்கு வருவேன், தேனிக்கும் வருவேன், நிச்சயம் வருவேன். வரும் பொழுது உங்களின் குறிப்பேட்டை நிச்சயம் சரிபார்ப்பேன்.

இந்தச் சட்டமன்றத் தேர்தல் எனக்கு மட்டும் இல்லை, உங்களுக்கும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சோதனை. நாம் நிச்சயம் சரியாகப் பணியாற்றினோம் என்றால் நிச்சயம் வெற்றி பெற்றுவிடுவோம். ஆனால், சாதாரணமாக வெற்றி பெற்றால் போதுமா? மிகச் சிறப்பாக வெற்றி பெற வேண்டும். நம்மீது, இளைஞர் அணி மீது தலைவர் அவர்கள் மிகுந்த பெரிய நம்பிக்கையை வைத்திருக்கிறார். நம் அனைத்து செயல்களையும் தலைவர் கவனித்துக்கொண்டு இருக்கிறார். உங்களை மட்டும் இல்லை, என்னையும் சேர்த்து தலைவர் கவனித்துக்கொண்டு இருக்கிறார்.

தலைவர் அவர்கள் நமக்கு ஒரு இலக்கு கொடுத்திருக்கிறார். ‘வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு’ என்று. இருநூறு என்பது இலக்கு, ஆனால் நாம் அடுத்த 29 நாட்கள் சரியாக வேலை பார்த்தோம் என்றால் இருநூறு இல்லை, 234 தொகுதியிலும் நிச்சயம் நாம்தான் வெற்றி பெறப் போகிறோம்.

இங்கே நம் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்கள் சொன்னது மாதிரி சென்ற தேர்தலில் திண்டுக்கல், தேனி 11 தொகுதிகளில் ஏழு தொகுதி வெற்றி பெற்றிருக்கிறோம். இந்த முறை 11–க்கு 11, 100% வெற்றி பெற்றாக வேண்டும். திண்டுக்கல், நிலக்கோட்டை, நத்தம் சென்ற முறை வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறோம். இந்த முறை வெற்றி பெற்றாக வேண்டும். அதே மாதிரி சென்ற முறை, தேனி மாவட்டத்தில் போடியில் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறோம். இந்த முறை நிச்சயம் வெற்றி பெற்றாக வேண்டும். இந்த முறை 11–க்கு 11 வெற்றி பெற்றாக வேண்டும். அது மட்டுமே நம் இலக்காக இருக்க வேண்டும்.

நாம் பெறும் வெற்றிதான் இளைஞர் அணிக்கு நாம் சேர்க்கக்கூடிய பெருமை. அதை நிச்சயம் செய்வோம் என்று கேட்டுக்கொண்டு, மே 4–ஆம் தேதி, வாக்கு எண்ணிக்கை. நிச்சயம் அன்றைக்கு 200 தொகுதிக்கு மேல் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றுவிட்டது என்ற செய்தி நம் காதுகளுக்கு வர வேண்டும்.

மீண்டும் ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று நம் தலைவர் அவர்கள் பொறுப்பேற்க வேண்டும். அதற்கு இளைஞர் அணியின் உழைப்பு மிக அருமையாக இருந்தது, இந்த வெற்றிக்கு மிக மிக முக்கிய காரணம் இளைஞர் அணி உழைப்பு என்று எல்லாரையும் சொல்ல வைக்க வேண்டும். அதுதான் இளைஞர் அணிக்குப் பெருமை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சிறப்பான வாய்ப்பைக் கொடுத்த மாவட்டக் கழகத்துக்கும், நிகழ்ச்சிக்கு உடனடியாக வந்திருந்த அனைத்து இளைஞர் அணி நிர்வாகிகள், இரண்டு மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர.சக்கரபாணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐ.பி.செந்தில் குமார், கம்பம் ராமகிருஷ்ணன், காந்திராஜன், மகாராஜன், சரவணகுமார், தளபதி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்கத்தமிழ்ச்செல்வன், மாநகர மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், மாநகரச் செயலாளர் ராஜப்பா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் போடி லட்சுமணன், முத்துராமலிங்கம், சுப்புரத்தினம், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் ஜி.பி.ராஜா, ஆனந்தகுமார், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் ஜெயக்குமார், இரா.பாண்டியன், ஜெயன், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கணேசன், ஹரிஹரசுதன், ஆஜீப் கான், செஞ்சுரி செல்வம், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அப்துல் ரகுமான் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.